DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C. 323/2017 P.W.19**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

NAME : திரு.மணிகண்டன்

FATHER'S NAME :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.11.2021**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை மாநகர் மத்திய குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 28.02.2017 தேதி 20.30 மணியளவில் கூடல்புதூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நான் நிலைய அலுவலில் இருந்த போது மதுரை வடக்கு வட்டம் தத்தனேரி கிராமம் கிராம நிர்வாக அலுவலர் திரு.பால் டேனியல் ஆனந்த் என்பவர் அவரிடம் மதுரை ஆனையூர் TNHB colony S120 என்ற முகவரில் குடியிருக்கும் லேட்,ராஜமாணிக்கம் என்பவரின் மகன் ராஜேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம நிர்வாக அலுவலர் திரு.பால் டேனியல் ஆனந்த் என்பவர் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்துடன் ராஜேஷ் என்பவருடன் நிலையத்தில்

ஆஜராகி அவர் கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு நிலைய குற்ற எண்.126/2017 US 12(b), 302 IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன். இதன் துரித முதல் தகவல் அறிக்கை அசல் வாதியின் புகார் மனு, மற்றும் கிராம நிர்வாக அதிகாரியிடம் ராஜேஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அசல் ஆகியவற்றையும் இணைத்து நீதித்துறை நடுவர் எண்.4 அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்., முதல் தகவல் அறிக்கையின் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளின் பார்வைக்கு

அனுப்பி வைத்தேன். பின்னர் வாதி அழைத்து வந்த சம்பவத்தில் தொடர்புடைய எதிரி ராஜேஷ் என்பவரை திரேக பரிசோதனை செய்து பாராவசம் எதிரியை பாதுகாப்பிற்காக வைக்கும் பொருட்டு வாதி மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் 21.00 மணிக்கு சம்பவ இடமான மதுரை ஆனையூர் TNHB colony S120 என்ற வீட்டிற்கு சென்று பார்வையிட்ட போது வீட்டின் வடமேற்கு மூளையில் பாத்ரூம் வாசலில் ரத்த காயங்களுடன் மணி என்பவரின் ஆண் பிரேதம் தலை மேற்காகவும், கை கால்கள் கிழக்கே மல்லாந்த நிலையில் பிணமாக கிடந்தார். சம்பவ இடத்தை போலிஸ் போட்டோகிராபர் தலைமை காவலர் திரு.முருகையா என்பவர் மூலம் புகைப்படம் எடுத்தும்,. சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்ட மாநகர காவல் துறை மோப்ப நாய் மங்கை மற்றும் அதன் பொறுப்பாளர் தலைமை காவலர் 174 திரு.கதிரேசன் என்பவர் மூலம் சோதனை செய்தும் சாட்சிகள் கணேசன், முத்துப்பாண்டி, ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை தெருவிளக்கு மற்றும் search light உதவியுடன் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். பின்னர் 21.30 மணிக்கு சம்பவ இடத்தில் காணப்பட்ட ரத்தம் படிந்த சிமிண்ட் தரை சிறிதளவும், ரத்தம் படியாத சிமிண்ட் தரை சிறிதளவும், பெயர்த்து எடுத்து உடைந்த நிலையில் காணப்பட்ட நீல நிற பிளாஸ்டிக் சேர்

துண்டுகளையும், ஹாலில் உள்ள இரும்பு கட்டில் மேலே காலியாக இருந்த டொரினோ குளிர்பான பாட்டில்–2 யையும் அதே சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் அத்தாட்சியில் கைப்பற்றினேன். கொலை செய்யப்பட்ட நபரின் உறவினர்கள் யாரும் சம்பவ இடத்தில் அருகாமையில் இல்லாததாலும் அவர்கள் அனைவரும் வெளி ஊரிலும் வெளி மாநிலத்திலும் வசித்து வருவதாலும் சம்பவ இடத்தில் பிரேத விசாரணை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் உடனடியாக பிரேதத்தை அப்புறப்படுத்தி பிரேத பரிசோதனை செய்வதற்காக மதுரை அரசு ராசாசி மருத்துவமனை சவக்கிடங்கில் வைப்பதற்கு முதல் நிலை காவலர் 1939 திரு.முகமது ஜாபர் கான் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். தொடர்ந்து சம்பவம் பற்றி சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் திரு.பால் டேனியல் ஆனந்த், கணேசன், முத்துப்பாண்டி, விக்டோரியா, மற்றும் திருப்பதி பாலாஜி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.30 மணிக்கு காவல் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த எதிரி ராஜேஷ் என்பவரை பற்றி மேற்படி வாக்குமூலங்களிலிருந்தும் எனது புலன் விசாரணையில் இருந்தும் கொலை சம்பவத்தில் எதிரி ராஜேஷ் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் கைது செய்து எதிரி கைது பற்றி அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் உச்சநீதிமன்ற கட்டளையை முறையாக பின்பற்றினேன். அதன் பிறகு சாட்சிகள் ராமராசு, செல்வகுமார் முன்னிலையில் 23.40 மணிக்கு எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததிலிருந்து எதிரிகளுடன் விஜய் என்ற விஜி என்பவர் சம்பந்தப்பட்டிருப்பதை தெரிந்து கொண்டேன். என்னை அழைத்து சென்றால் நாங்கள் மணியை கொலை செய்த எனது வீட்டை அடையாளம் காட்டி வீட்டில்

மறைத்து வைத்திருக்கும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியையும் நான் அணிந்திருந்த பேன்ட், சட்டையும் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். தொடர்ந்து 01.03.2017 தேதி அதிகாலை 01.30 மணிக்கு எதிரி ராஜேஷ் மற்றும் அதே சாட்சிகள் ராமராசு, செல்வக்குமார் ஆகியோர்களுடன் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ வீட்டில் கிரைண்டர் அடியில் மறைத்து வைத்திருந்த எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக கூறி அடையாளம் காட்டி ஆஜர் செய்த ஒரு ரத்த கறை படிந்த கத்தி ஒன்றையும், அது சுமார் 40 செமீ நீளமும் கத்தி பாகம் 29 செமீயும் மர கைபிடி 11 செமீ உடையது. ரத்த கறை படிந்த nexa என்ற denim ஜீன்ஸ் blue வெள்ளை கலர் பேன்ட் மற்றும் floon solly சிவப்பு கலர் சட்டை ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மகசரில் கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சி அசாஆ 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் சாபொ1 முதல் 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு எதிரி ராஜேஷ் மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி ராஜேஷ் என்பவரை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். ராமராசு, செல்வக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.03.2017 தேதி காலை 11.00 மணியிலிருந்து 13.00 மணி வரை மதுரை அரசு ராசாசி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தும் பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டு கோள் கடிதம் கொடுத்து grade–I PC 1939 திரு,முகமது ஜாபர் கானை அனுப்பி வைத்தேன். மேற்படி வேண்டுகோள் கடிதம் அசாஆ 21. அங்கு வந்த சாட்சிகள் மலர்விழி, வேலுத்தாய், ஆறுமுகம், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை

அவர்கள் குல வழக்கப்படி நல்லடக்கம் செய்ய அவரது மனைவி திருமதி, மலர்விழி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் நிலையம் வந்து எதிரி ராஜேஷ்யை நீதிமன்ற காவல் அடைப்பு செய்ய தலைமை காவலர் 2076 திரு.மதுரைவீரன், தலைமை காவலர் 3429 திரு.ஆண்டரசன் ஆகியோர் மூலம் அனுப்பி வைத்தேன். மற்ற எதிரிகளை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 02.03.2017 தேதி எதிரி லாவண்யாவை அவரது வீட்டின் முன்பு வைத்து காலை 06.00 மணிக்கு போலிஸ் பார்ட்டிகள் மற்றும் பெண் தலைமை காவலர் 3010 திருமதி. சுமதி அவர்கள் உதவியுடன் இ,வ்வழக்கிற்கான காரணம் கூறி கைது செய்து 06.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி கைது பற்றிய விவரத்தை அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் உச்சநீதிமன்ற கட்டளைகளை முறையாக பின்பற்றினேன். சாட்சிகள் கோவிந்தன், தனசேகரன், ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து என்னை என் வீட்டிற்கு அழைத்து சென்றால் நான் எனது கணவர் மணியை ராஜேஷ் வீட்டிற்கு அழைத்து செல்ல பயன்படுத்திய எனது yamaha ray வண்டியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் பேரில் 07.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி லாவண்யா தனது வீட்டிற்கு முன்பாக இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக கூறி ஆஜர்படுத்திய TN 59 BL 8822 yamaha ray வண்டியையும் micromax white colour cellphone யையும் மகசர் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி இரு சக்கர வாகனம் சாபொ–9 மற்றும் micromax white colour cellphone சாபொ–10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு நிலையம் வந்து மற்ற எதிரிகளையும் தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி மதுரை விளாங்குடி கண்மாய் கரையில் இருக்கும் பிறையடி கருப்பசாமி கோவில் அருகில் வைத்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட

எதிரிகள் முத்துக்குமார் என்ற குமார் மற்றும் விஜய் என்ற வி'ஜி ஆகியோரை நான் போலிஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து காலை 10.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து 10.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து எதிரிகள் கைது பற்றிய விவரத்தை அவர்கள் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் உச்சநீதிமன்ற கட்டளையை முறையாக பின்பற்றினேன். அதே சாட்சிகள் கோவிந்தன், தனசேகரன் முன்னிலையில் எதிரி முத்துக்குமார் என்ற குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எங்களை அழைத்து சென்றால் நாங்கள் மணியை கொலை செய்த ராஜேஷ் வீட்டையும் மணியை கொலை செய்ய நான் பயன்படுத்திய கத்தி, மற்றும் விஜய் பயன்படுத்திய எனது துண்டையும் மறைத்து வைத்திருக்கின்ற இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொன்னதன் பேரில் 02.03.2017 தேதி 12.00 மணிக்கு அதே சாட்சிகள் கோவிந்தன், தனசேகரன் முன்னிலையில் வழக்கின் எதிரிகள் முத்துக்குமார் என்ற குமார், விஜய் என்ற விஜி இருவரையும் அழைத்து சென்று மதுரை கூடல் நகர் உழவர் சந்தை அருகே வைத்து சம்பவத்திற்கு பயன்படுத்திய ரத்தக்கறையுடன் கூடிய கத்தியையும், அது சுமார்,. 31 செமீ நீளம், கத்தி பாகம் 19 செமீ, பிளாஸ்டிக் ஸ்டில் கலந்த கைபிடி 12 செமீ உடையது. அந்த கத்தியுடன் உறையும் சுமார் 22 செமீ நீளம் உடையது. மற்றும் சிவப்பு கோடு போட்ட ரத்தக்கறையுடன் கூடிய துண்டு ஒன்றையும் எடுத்து முத்துக்குமார் என்ற குமார் ஆஜர்படுத்தியதை அத்தாட்சி மகசரில் கைப்பற்றினேன். உடன் எதிரி விஜய் என்ற விஜி இருந்தார். மேலும் எதிரி விஜய் என்ற விஜிக்கு வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகள் VAO பால் டேனியல் ஆனந்த், கோவிந்தன், தனசேகரன், அபிநயா, பெருமாள், முதுநிலை காவலர் 3434 பாபு, பெண் தலைமை காவலர் 3010 திருமதி, சுமதி,

முதுநிலை காவலர் 1934 முகமது ஜாபர் கான், தலைமை காவலர் 2224 திரு.முருகையா ஆகியோர்களுடன் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரி விஜய் என்ற விஜி கொடுத்த வாக்குமூலம் அசாஆ 22. மேற்படி எதிரிகள் லாவண்யா, முத்துக்குமார் என்ற குமார், விஜய் என்ற விஜி ஆகியோர்களை காவல் அடைப்பு செய்ய நீதிமன்ற காவலுக்கு வழிக்காவலாக SSI திலகர். தலைமை காவலர் 3429 ஆண்டரசன், grade – I PC 373 ஜஹாங்கிர், பெண் தலைமை காவலர் 3010 சுமதி, grade – I 826 திருமதி பாண்டிமா தேவி, ஆகியோர்களுடன் அனுப்பி வைத்தேன். 03.03.2017 தேதி சாட்சிகள் சுப்பிரமணியன், சுடலைமுத்து,. ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.03.2017 தேதி சாட்சிகள் சேகர், ராஜேந்திரன், ரகுமான் கான், ரூபன் சக்கரவர்த்தி, சதீஷ் கண்ணன், சதீஷ்வரன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09.03.2017 தேதி மதுரை அரசு மருத்துவ கல்லூரியில் மருத்துவ தடயம் சார்ந்த துறையில் விரிவுரையாளராக பணியாற்றும் டாக்டர். சரவணன் அவர்களிடம் PM சான்றிதழ் பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.03.2017 தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கைப்பற்றிய அனைத்து சொத்துக்களையும் Form 95 மூலம் நீதித்துறை நடுவர் எண்.4 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். 13.03.2017 தேதி RPR No.57/2017 பெறப்பட்டது. 20.03.2017 தேதி இவ்வழக்கின் சாட்சிகளான ராமராசு, விக்டோரியா, சதீஷ் கண்ணன், மற்றும் சதீஷ்வரன், ஆகியோர்களை 164 crpc படி வாக்குமூலம் பதிவு செய்ய தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மதுரை அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் அனைவரும் 164 ன்படி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன். மேற்படி 164 வாக்குமூலம்

அசாஆ 5 முதல் 8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.03.2017 தேதி தலைமை காவலர் 1939 திரு.முகமது ஜாபர் கானை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை பகுப்பாய்வு செய்வதற்காக வட்டார தடய அறிவியல் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கு வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.03.2017 தேதி டாக்டர். சரவணன் அவர்களிடம் இறுதி அறிக்கை பெற்று மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.04.2017 தேதி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வரும் சங்கர் குமார், விஜயந்திரன், அவர்களிடம் சொத்துக்களின் பகுப்பாய்வு செய்தது குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.04.2017 தேதி இவ்வழக்கின் விசாரணை முடிவடைந்து பின்னர் சட்டப்பிரிவான 120.(b), 302 இதச பிரிவுகளை சட்ட பிரிவு 120(b), 302, r/w 34 IPC ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 23. மேலும் சம்பவ இடத்தில் இருந்து S120 TNHB colony எதிரி ராஜேஷ் வீட்டில் இருந்து இறந்து கிடந்த மணி என்பவரின் பிரேதத்தின் போட்டோக்களையும் சம்பவ இடத்தில் எதிரி ராஜேஷ் வீட்டில் இருந்து கைப்பற்றிய கத்தியின் போட்டோவையும் மற்றும் எதிரி லாவண்யாவிடம் இருந்து கைப்பற்றிய TN 59 BL 8822 yamaha ray வாகனத்தின் போட்டோவும் இவை அனைத்து புகைப்படங்களையும் appendix மூலம் நீதிமன்ற நடுவர் எண்.4 க்கு அனுப்பி வைத்தேன். 20.04.2017 தேதி எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச 120(பி), 302 உ/இ 34 இதச பிரிவின் கீழ் குற்ற பத்திரிகை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையில் சாட்சிகள் ராஜேந்திரன், மற்றும் ரகுமான் கான் ஆகியோர் போலிஸ் விசாரணையில் கூறியது போல் தான் சாட்சியமளித்துள்ளனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.